ரூ.261.83 கோடி மதிப்பில் பல்மருத்துவக் கல்லூரி வளாகத்தில் கட்டுமானப்பணிகள் நிறைவு!

ரூ.62.60 இலட்சம் மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் பயன்பாட்டிற்கு வந்தது!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்.

சென்னை, ஆக. 6 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.08.2025) தமிழ்நாடு அரசு பல்மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில், ரூ.33.57 இலட்சம் செலவில் வாய் முக தாடை சிறப்பு ஊடுகதிர்ப் படக் கருவி (Digitial Dental Xray), ரூ.3.39 இலட்சம் செலவில் ஒளித்தூண்டக் கூடிய பாஸ்பர் தகடு ஸ்கேன் (PSP), ரூ.11 இலட்சம் செலவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, ரூ.14.62 இலட்சம் செலவில் இணைய வழி நூலகம் (eLibrary) என ஆக மொத்தம் ரூ.62.60 இலட்சம் செலவில் உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் மருத்துவ பயனாளிகளுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டின் பழம்பெரும் பல் மருத்துவக்கல்லூரி என்கின்ற வகையில் 72 ஆண்டுகளுக்கு முன்னாள் 15 மாணவர்களு டன் பல் மருத்துவ பிரிவாக தொடங்கி பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்று 100 இளங்கலை பல் மருத்துவ மாணவர்கள் பயிலும் வகையில் 40 முதுகலை பல் மருத்துவ இடங்களுடன் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற பல் மருத்துவக்கல்லூரி நமது தமிழ்நாடு அரசு பல் மருத்துவக்கல்லூரி ஆகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கடந்த 4.5 ஆண்டுகளில் பல்வேறு வகைகளில் புதிய மருத்துவக் கட்டமைப்புகளும், அதிநவீன மருத்துவ உபகரணங்களும் தொடர்ச்சியாக செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இந்த பல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை 5,35,611 பேர் மருத்துவ பயன் பெற்றிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. தினந்தோறும் 1500 பேர் புறநோயாளிகளாகவும், உள் நோயாளிகளாகவும் இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பயன்பெற்று வருகிறார்கள். அந்தவகையில் ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் என அனைத்து தரப்பினருக்கும் பல் மருத்துவ சேவையை ஆற்றி வரும் இந்த பல் மருத்துவக்கல்லூரிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு வகைகளில் ஏராளமான புதிய மருத்துவக் கட்டமைப்புகளை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகிறார்கள். இப்போது இன்றைக்கும் கூட வாய் முக தாடை சிறப்பு ஊடுகதிர்ப் படக் கருவி, ஒளித் தூண்டக் கூடிய பாஸ்பர் தகடு ஸ்கேனர் கருவி போன்றவைகள் ரூ. 36.90 இலட்சம் செலவில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இணைய வழி நூலகம் ரூ.14.62 இலட்சம் செலவில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் சிஎஸ்ஆர் நிதி பங்களிப்புடன் 15,000 லிட்டர் கொள்ளளவுடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையம் ஒன்று சுடுநீராகவும், குளிர் நீராகவும் தரக்கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்பு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.62.60 இலட்சம் மதிப்பீட்டில் இந்த பல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவக் கட்டமைப்பு இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு ள்ளது.

பல் மருத்துவக் கல்லூரி கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி ஏறத்தாழ ரூ.261.83 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வகைகளிலான புதிய மருத்துவக் கட்டமைப்புகள் இந்த வளாகத்தில் கட்டப்பட்டு வருகிறது. குறிப்பாக 1,34,764 சதுர அடி பரப்பில் இந்த பல் மருத்துவக்கல்லூரியின் பழைய கட்டிடம் என்பது 2 தளங்களை கொண்டதாக இருந்தது. இந்தக் கட்டிடத்தின் மேல் 4 புதிய தளங்கள் கொண்ட கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. ரூ.64.09 கோடி மதிப்பீட்டில் 1,34,764 சதுர அடி பரப்பில் 4 தளங்கள் கொண்ட இக்கட்டிடத்தில் செயற்கை பல் கட்டும் துறை, ஈறு நோய் சிகிச்சை துறை, பல் சீரமைப்புத் துறை, குழந்தை பல் மருத்துவத்துறை, சமுதாய பல் பாதுகாப்புத் துறை, தேர்வுக்கூடம், கருத்தரங்கு கூடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் கூடிய கட்டிடம் கட்டும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வரும் செப்டம்பர் 30க்குள் இந்தக் கட்டிடம் பணி முடித்துத் தருவதாக பொதுப்பணித்துறை அலுவலர்கள் உறுதி தந்திருக்கிறார்கள். எனவே செப்டம்பர் மாத இறுதிக்குள் பல் மருத்துவக்கல்லூரி மருத்துவ பயன்பாடு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. அதோடுமட்டுமல்லாமல் பல் மருத்துவக்கல்லூரிக்கு ரூ.64.90 கோடி மதிப்பீட்டில் 1,50,136 சதுர அடி பரப்பில் தரைத்தளம் மற்றும் 9 தளங்கள் கொண்ட பார்வையாளர்கள் அறை, மருத்துவ அறை, சமையலறை, படிக்கும் அறை, பொழுதுபோக்கு அறை, உடற்பயிற்சி கூடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் 274 தங்கும் அறைகள் கொண்ட முதுகலை மற்றும் இளங்கலை பல் மருத்துவ மாணவியர்களுக்கு தங்கும் விடுதி ஒன்று கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விடுதிக் கட்டிடம் பணிகள் டிசம்பர் இறுதிக்குள் பல் மருத்துவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் கட்டிடப் பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் மருத்துவக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்திடும் நோக்கில் குறிப்பாக இந்த பல் மருத்துவக்கல்லூரியின் தரத்தை சர்வதேச அளவில் உயர்த்துவதற்கு ரூ.4.31 கோடி மதிப்பீட்டில் அதிநவீன பல் மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதே வளாகத்தில் நம்முடைய சென்னை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் அவர்களுக்காக இன்று 614 முதுகலை மாணவர்கள் தங்கும் வகையில் குறிப்பாக சென்னை மருத்துவக்கல்லூரியைச் சேர்ந்த முதுநிலை கல்லூரி மாணவர்கள் தங்குவதற்கு 307 அறைகள் கொண்ட கட்டிடம் ரூ.132.84 கோடி மதிப்பீட்டில் கடந்த 1.5 ஆண்டுகளுக்கு முன்னாள் தொடங்கி வைக்கப்பட்டு, அந்தப் பணியும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக விரைவில் அதுவும் முடிவுற இருக்கிறது.

அரசு பல் மருத்துவக்கல்லூரியில் 48 பல் மருத்துவர் காலிப்பணிடங்கள் தொடர்பான கேள்விக்கு

ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டின் மக்கள் நல்வாழ்வுத்துறையில் இந்திய மருத்துவத் துறையில் ஒரு மருத்துவர் பணியிடம் கூட காலி இல்லாத அளவிற்கு அனைத்து மருத்துவ பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை நிர்வாகத்தை பொறுத்த வரை 2026ல் ஓய்வு பெறுகிறவர்களின் எண்ணிக்கையை யும் மனதில் வைத்து 2,642 மருத்துவ பணியிடங்கள் 4 மாதங்களுக்கு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களினால் ஆணைகள் வழங்கப்பட்டது. DMS, DME போன்ற நிர்வாகங்களுக்கு முதுநிலை படித்த மாணவர்களை அங்கிருந்து மாற்றி அனுப்பும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் காலியாக இருக்கிற மருத்துவர் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்ப டவிருக்கிறது. இந்த நிலையில் பல் மருத்துவர்கள் ஒட்டு மொத்தமாக காலி இடங்களே 48 தான். இந்த 48 காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு MRB மூலம் தேர்வு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அதில் 11,720 நபர்கள் தேர்வினை எழுதினார்கள். இந்த 11,720 நபர்களில் 8,000த்திற்கும் மேற்பட்டவர்கள் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்றவர்களுக்கு Ranking list, Certificate Verification, Communal Rotation எல்லாம் முடித்து இந்த 48 பேர் யார் என்ற விவரம் நேற்றைக்கு தேர்வு செய்து முடிந்தது. இந்த 48 பணியிடங்கள் மட்டுமல்ல இன்னும் 450 Technical Staff எல்லாம் சேர்ந்து மிக விரைவில் முதலமைச்சர் பணி ஆணைகள் தரவிருக்கிறார்கள். இங்கே முதலில் ஒரு பல் மருத்துவக்கல்லூரி தான் இருந்தது. இந்த பல் மருத்துவக்கல்லூரிதான் 72 வருட பழமை வாய்ந்தது. சிதம்பர த்தில் குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் தனியார் வசம் இருந்த ஒரு பல் மருத்துவக் கல்லூரியை கையகப்படுத்தி இன்றைக்கு அதில் நூற்றுக்க ணக்கான ரூபாய் செலவு செய்து மேம்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்கு அடுத்து நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் புதுக்கோட்டையில் ஒரு புதிய பல் மருத்துவக்கல்லூரியை தொடங்கினார்கள்.

பல் மருத்துவர் பணியிட மாற்றம் தொடர்பான கேள்விக்கு

பணியிடமாற்றம் செய்வது தவறு இல்லை. சென்னையில் பணிபுரியும் மருத்துவர்கள் புதுகோட்டை மாவட்டத்திற்கும், புதுகோட்டையில் உள்ளவரை சென்னைக்கு மாற்றுவதும் நிர்வாக வசதிக்காக செய்யப்படுகிறது. இங்கு ஒருவர் மருத்துவராக வருகிறார் என்றால் அவர் ஓய்வு பெறுகின்ற வரையில் இங்கு பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. இப்பொழுது இத்துறையில் 1.75 இலட்சம் பணியாளர்கள் பணியாற்றிகின்றனர் தொடர்ச்சியாக பணியிட மாறுதலுக்காக வெளிப்படை தன்மையுடன் கலந்தாய்வு நடைபெறுகிறது.

"நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்" தொடர்பான கேள்விக்கு

அதிமுக வழக்கு தொடர்ந்தது விந்தையாகும். கடந்த கால ஆட்சியில் அம்மா உப்பு என்ற திட்டத்தின் மூலம் எத்தனை இடத்தில் உப்பு விற்றார்கள் என்ற விவரம் தெரியவில்லை. அம்மா உப்பு என்ற பெயர் வைத்து ஒரு பத்து கடைகளில் தான் அம்மா உப்பு விற்கப்ப ட்டது, அதற்கு பிறகு அம்மா உப்பு எங்கும் விற்கவில்லை. அம்மா குடிநீர் என்று ஒன்று தொடங்கினார்கள். அதற்கான முகாம்கள் பேருந்து நிலையத்தில் மட்டும் அம்மா குடிநீர் விற்கப்பட்டது. மேலும் சாலை ஓர பூங்கா ஒன்று ரூ.2 இலட்சம் செலவு செய்து அதற்கு அம்மா தீவு பூங்கா என்று பெயர் வைத்தார்கள். எந்த திட்டம் தொடங்கினாலும் அம்மா என்று பெயரையே வைத்தார்கள். இலட்சக்கணக்கான மக்கள் பயன் பெரும் நலம்காக்கும் ஸ்டாலின் திட்டத்தினால் திமுக விற்கு பொது மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு கூடியிருப்பதன் காரணமாக காழ்ப்புணர்ச்சியினால் அதிமுக வழக்கு தொடர்ந்திருக்கின்றனர் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் சாலவாக்கம் அடுத்த எடமிச்சி ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நேற்று காலை அரசுப் பள்ளியில் நடைபெற்றது அதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம் எல் ஏ ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் ஆர்த்தி, சார் ஆட்சியர் ஆஷிக் அலி, ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார் உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி சாலவாக்கம் ஒன்றியம்

எடமிச்சி ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்

அமைச்சர் ஆர்.காந்தி – மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மனுக்கள் பெற்றனர்

காஞ்சிபுரம், ஆக. 6 - காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி சாலவாக்கம் ஒன்றியம் எடமிச்சி ஊராட்சியில் ' உங்களுடன் ஸ்டாலின்' முகாம் நேற்று நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆர்.காந்தி - மவாட்டச் செயலாளர் க. சுந்தர் மனுக்கள் பெற்றனர்

இந்த முகாமிற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ. தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் சத்யா சக்திவேல், தேன்மொழி மணி, கார்த்திகேயன், பாலு, பன்னீர்செல்வம், துணைத் தலைவர் ஆனந்தன், ஆகியோர் முன்னிலை வகித்தார். ஒன்றியக் குழு துணை பெருந்தலைவர் வசந்தி குமார், ஊராட்சி மன்ற தலைவர் தர்மராஜ் ஆகியோர் அனைவரும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம் எல் ஏ ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார். இதனைத் தொடர்ந்து ஜாதிச் சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று ஆகிய மனுக்களை உடனடியாக பெற்று பரிசினை செய்து சான்றிதழ்களை பொது மக்களுக்கு உடனடியாக வழங்கினர். மேலும் சிறுப்பினாயூர், அண்ணாத்தூர், பொற்பந்தல், சித்தனக்காவூர் ஆகிய கிராமங்களில் இருந்து கலந்து கொண்ட பொதுமக்களிடமிருந்து 1800 மனுக்கள் பெறப்பட்டது

இதனைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆயிரம் பேருக்கு அமைச்சர் காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ மத்திய உணவு பரிமாறினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் ஆர்த்தி, சார் ஆட்சியர் ஆஷிக் அலி, ஒன்றிய செயலாளர்கள் ஞானசேகரன், குமார், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், வெங்கடேசன், பாலமுருகன், வெங்கட்ராமன், முரளி, இரத்தினமாலா, மணி, வெங்கடசுப்பிரமணியன், பாண்டியன், பி.சுப்பிரமணி, பாஸ்கர், கார்த்திக், நந்தா, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கலைஞர் நகர் வடக்கு பகுதி கழகத்தினருக்கு வேண்டுகோள்!

பகுதி கழக செயலாளர் மு.இராசா அறிக்கை

சென்னை, அக. 6 - கலைஞர் நகர் வடக்கு பகுதி கழகத்தின் சார்பில் நேற்று 05-8-2205 அன்று நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி அமைதிபேரணி தொடர்பாக வட்ட கழக செயலாளர்கள் பங்கேற்பது கூறித்த பகுதி கழக செயலாளர் மு.இராசா தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது நாளை (07-08-2205 அன்று காலை நடைபெறும் அமைதி பேரணியில் அனைத்து வட்டங்களில் இருந்து அனைத்து நிர்வாகிகள் கழக தோழர்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்,

மற்றும் அனைத்து 6 வட்டங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் 100 திருவுருவ படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்துகின்றனர் பின்னர் மாலையில் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறவுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருகரங்களால் இயற்றபட்ட பாடல்களின் இசையஞ்சலி நிகழ்ச்சியில் வடக்கு பகுதி கழகத்தின் சார்பில் 300 கழக தோழர்கள் கலந்து கொள்ள முடிவெடுக்கப்பட்டது எனவே மாவட்டகழக, பகுதி கழக வட்டகழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு பகுதிச் செயலாளர் மு.இராசா கேட்டுக் கொண்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 167 வது நாள்!

அம்பத்தூர் தெற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஆக. 6 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 167 ஆம் நாளான - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (05.08.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 88, கலைவாணர் நகர், மகாலட்சுமி தெரு, 2) வட்டம் 89, இளங்கோ நகர் பூங்கா டிவி எஸ் காலனி, மாமன்ற உறுப்பினர் அலுவலகம், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் .பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளு க்காக ஒன்றுபட்டு போராடு வோம்.

தமிழ்நாடு போராடும், தமிழ் நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி. எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி. வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, வி.ரவிந்திரன், வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜய குமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூரில் சலவைத் தொழிலாளியின் மகள் பொறியியல்

படிப்பு கட்டணத்திற்கு ரூ.1 லட்சத்து 70 ஆயிரம் நிதி உதவி!

கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஆக. 6 - திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட சலவைத் தொழிலாளியின் மகளின் கல்வி கட்டணம் 1,70,000. ரூபாய், கே.பி.சங்கர் எம். எல்.ஏ. வழங்கினார்.

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எண்ணூர் தாழங்குப்பம் மெயின் ரோட்டில் வசித்து வரும் சலவைத் தொழிலாளி திரு.பாஸ்கர் அவர்களின் மகள் செல்வி பா.இந்து பாஷினி அவர்கள் நடந்து முடிந்த 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் எண்ணூர் வ.உ.சி. பள்ளியில் பயின்று 549 மதிப்பெண் பெற்று கலந்தாய்வில் கலந்து கொண்டு கவரப்பேட்டை RMD பொறியியல் கல்லூரியில் Artificial intelligent machine learning (AIML) கல்வி பயில வாய்ப்பு பெற்றுள்ளார்.

மாணவி திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கரை சந்தித்து கல்லூரி கட்டணத்திற்கு உதவிடு மாறு கோரிக்கை வைத்தார் அவரின் கோரிக்கையை ஏற்று திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மாணவிக்கு ரூபாய் 1,70,000 கல்வி கட்டணத்தை வழங்கினார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கல்வி மட்டுமே யாராலும் அழிக்க முடியாத செல்வம் என்பதை உணர்ந்து எனவே தொடர்ந்து ஏழை எளிய உழைக்கும் மக்களின் கல்விக்கு உறுதுணையாக இருப்பேன் என்று திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் உறுதி அளித்தார்.

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எண்ணூர் தாழங்குப்பம் மெயின் ரோட்டில் வசித்து வரும் சலவைத் தொழிலாளி பாஸ்கர் மகள் செல்வி பா.இந்து பாஷினி பொறியியல் கல்லூரியில் Artificial intelligent machine learning (AIML) கல்வி பயில வாய்ப்பு பெற்ற. மாணவி திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கரை சந்தித்து கல்லூரி கட்டணத்திற்கு உதவிடுமாறு கோரிக்கை வைத்தார் அவரின் கோரிக்கையை ஏற்று அவர், ரூபாய் 1,70,000 கல்வி கட்டணத்தை வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள்! கழகத் தலைவர்

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பா. அருண்குமார் வேண்டுகோள்!

சென்னை,ஆக.6- சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா. அருண்குமார் வேண்டுகோள் வருமாறு:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதல்வர் தளபதி மு. க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆகஸ்ட் 7, காலை 7 மணியளவில் அமைதிப் பேரணி நடைபெறுகிறது. இதில் இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாவட்ட கழக செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் ஆகியோர் அறிவுறுத்தலின் படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு நாளில் சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி, மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், ஒன்றிய அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய துணை அமைப்பாளர்கள், தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள், தமிழ் மாணவர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இதனைத் தொடர்ந்து மாலை 5 மணி அளவில் முத்தமிழ் அறிஞருக்கு இசைஅஞ்சலி நிகழ்ச்சி நடைபெறுகிறது. "கலைஞர் வார்த்த காவியப் பாடல்கள்" என்ற தலைப்பில் வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியில் மாணவர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு தலைவர் கலைஞருக்கு இசை அஞ்சலி செலுத்த வேண்டுகிறேன்.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா. அருண்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சேப்பாக்கம் எஸ்.மதன்மோகன் தலைமை!

63-வது வட்டக் கழகக் கூட்டம்!

வட்டச் செயலாளர் பி.பிரபாகரன் அறிக்கை!

சென்னை, அக. 6 - சேப்பாக்கம், 63-வது வட்டக் கழகச் செயலாளர் பி.பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேப்பாக்கம் பகுதி 63வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் என் (பி. பிரபாகரன்) தலைமையில் பகுதி செயலாளரும் மண்டலக்குழு தலைவருமான எஸ் மதன்மோகன் எம் சி அவர்களின் முன்னிலையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆகஸ்ட் 7 நினைவு நாள் அமைதிப் பேரணி குறித்து ஆலோசனைக் கூட்டம் புதுப்பேட்டை ஆவின் பாலகத்தில் (ஆகஸ்ட் 5 புதன் கிழமை) மாலை 5 மணியளவில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு வட்டத்திற்கு உட்பட்ட அணிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு வட்டச் செயலாளர் பி.பரிபாகரன் தெரிவித்துள்ளார்.